**ரத்தொட்ட பிரதேச சபை – 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரத்தொட்டபிரதேச சபையின் 2021திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரத்தொட்டபிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நன்கொடையாக கிடைத்திருந்த மொத்தம் ரூபா175,625 ஆன மருந்து இருப்புக்கள் மூலதன வருமான கணக்கிற்கு செலவு வைக்காமல் கடன் கொடுத்தோருக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மருந்து இருப்பினை வழங்கும் போது மீண்டெழும் செலவினத்துக்கு வரவு வைக்காமல் மூலதனச் செலவினத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பட்டியல் சமர்ப்பிக்கப்படாது இருந்த 36 மதிப்பிடப்பட்ட செயற்திட்டங்களின் பெறுமதி மற்றும் உடன்படிக்கைப் பெறுமதியி மொத்தம் ரூபா11,914,404 ஆன தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | களஞ்சிய இராக்கை நிர்மாணத்துக்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா393,612 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | | |

| | | |
|---|---|---|
| (ஈ) வாகன தொகுதி நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் சம்பளத்துக்காகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 214,750 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 277,894 ஆன எழுதுகருவி இருப்பு நிதிக் கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) மீளாய்வாண்டின் களஞ்சிய இருப்புக்களிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 1,070,582 ஆன நீர்க் குழாய் மின்னுபகரணங்கள் மற்றும் கட்டிடப் பொருட்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக் | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) மீளாய்வாண்டில் சமுக மற்றும் களியாட்ட நடவடிக்கைகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா225,000 அளவிலான 38.3 பேர்ச்சஸ் அளவிலான 02 காணிப்பகுதிகள் மூலதன வருமானம் அற்றும் செலவினங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஏ) முன்னைய ஆண்டில் தீர்வு செய்யப்பட்ட ரூபா 68,660 ஆன களஞ்சிய கடன் கொடுத்தோர் மீதியொன்று மேலும் மீளாய்வாண்டிலும் களஞ்சிய கடன் கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சபை பயன்படுத்தப்படாத வெளித்தரப்பினருக்குரிய காணிகளில் 07 விளையாட்டரங்குகளை அபிவிருத்தி செய்வதற்கு 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா1,678,044 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |

**1.6.2. இணங்காதகட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நானாவித கடன்பட்டோர் ரூபா 36,467,570 ஆக இருந்த போதும் அதற்குரிய ஆவணங்களின் பிரகாரம் பெறுமதி கூட்டுத்தொகை ரூபா 37,173,234 ஆக இருந்தமையால் ரூபா 705,664 ஆன வேறுபாடு காணப்பட்டது. | குறித்த இணக்கமின்மையை ஆராய்ந்து பார்க்க் நடவடிக்கை எடுப்பதாக கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதாக | நிதிக்கூற்று மீதிகள், உரிய ஆவணங்கள், அட்டவணைகள் என்பவற்றுடன் சீராக்கப்பட வேண்டும.சரியாக இருக்க வேண்டும். |

**1.6.3 தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24 ஆண்டுகளுக்க மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருக்கும் ரூபா 15,462 ஆன தொங்கல் கணக்கு சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தொங்கல் கணக்கு மீதியை பதிவழிப்பதற்கு நடவடிக்கைப எடுப்பதாக | தொங்கல் கணக்க மீதி இனங்காணப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

**1.6.4. கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல் சமர்ப்பிக்கப்படாமையால் மொத்தம் ரூபா 39,008,681 ஆன 17 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | பபதில் அளிக்கப்பட்டிருக்கவில் லை. | கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(3) ஆம் பிரிவு | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் குறிதத் நிர்மாணங்களின் 16 பிடிகாசு ரூபா 433,379தொகை தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை | வைப்புக்களை விடுவிப்பதற்ம் ஏனைய பிடிகாசினை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பிடிகாசினை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,906,371ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,952,145ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சேகரிப்பின் செயலாற்றல்ல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரி வரியும்<br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்த ஒரு அலகில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட வீதவரி நிலுவையாக உள்ள 26 ஆதுனங்களுக்குரிய 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 384,015 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை தடைசெய்யும் நடவடிக்கைகள் செயற்படுத்தி நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளை பின்பற்றி வீதவரி அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) வாடகை<br>கடைகளை வாடகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கையின் 5(i) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ரத்தொட்டை நகரில் அமைந்துள்ள சபைக்குரிய 45 கடைகளில் 6 மாதங்கள் முதல் 61 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நிலுவையான ரூபா 2,828,730ஆன கடை<br>வாடகை அறவிடப்பட்டிருகக்வில்லை. | நிலுவை வாடகை செலுத்தாத கடை உரிமையாளர்களுக்டகு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய 3 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,341,662 தொகை அறவிடப் படாதிருந்ததுடன் அதில் அறவிடப்படாமல் இருக்கும் காலம் 1 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 4,725,516 ஆகவும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா | எதிர்காலத்தில் நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 6,927,902 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,688,244என உள்ளடக்கப் பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 49,625,498 தொகை தீர்வுசெய்யப்படாதிருந்ததுடன் அதில் தீர்வு செய்யாமல் இருக்கும் காலம் 1 ஆண்டிற்கு குறைந்த மீதி ரூபா 31,618,301 ஆகவும் 1 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 2,557,149 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 15,450,048 என உள்ளடக்கப் பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை எதிர்காலத்தில் தீர்வுசெய்ய நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வுசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19 (1) (xii) ஆம் பிரிவின் பிரகாரம் 30.5 பேர்ச் பரப்பளவிலான லொன்வில் தோட்ட பெயரிலான காணி 2013 ஆம் ஆண்டின் போது அரச வங்கியொன்றின் ரத்தொட்ட கிளையின் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக முறையான மதிப்பீடு ஒன்று இல்லாமல் சபை தீர்மானித்த ரூபா 96,000 ஆன வருடாந்த குத்தகை அடிப்படையில் அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் உடன்படிக்கையொன்றும் மேற்கொள்ளாமல் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது | மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொண்டு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பி அங்கீகாரம் பெற்றுக்கொண்டு உடன்படிகதை கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக | பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு உடன்படிகதை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் ரூபா 531,800 ஆன 3035.5 பேர்ச் அளவிலான 24 மயானஙங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத 1040 பேர்ச் அளவிலான 8 மயானஙங்களின் உரித்து கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் பரிசோதனையொன்று மேற்கொண்டு குறிதத் காணியை இனங்கண்டு கையளிப்பு கட்டளை அல்லது உறுதிகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | குறித்த கரிணகளை இனங்கண்டு கையளிப்பு கட்டளை அல்லது உறுதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |